# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

### ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

UNIVERSITY OF JAFFNA
894.81107
ANA
AR/AR
LIBRARY

**பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர். ம. இரகுநாதன்
திரு. ஈ. குமரன்
திரு. க. அருந்தாகரன்

894.81106
ANA

ARCHIVES

276610

276610

10, 11 ஜனவரி 2020
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

University of Jaffna
Library
276610

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | "தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு" |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாசிரியர்கள் | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| முதற்பதிப்பு | : | 10 ஜனவரி 2020 |
| வெளியிடுவோர் | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை. |
| பக்க அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 829 |
| அச்சிட்டோர் | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# திருநாவுக்கரசரது பதிகங்களில் சைவசித்தாந்த இறையிருப்புக் குறித்த நிறுவல்கள் : ஒரு மெய்யியல் ஆய்வு

**தி. திலீபன்**
மெய்யியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**நா. ஞானகுமாரன்**
மெய்யியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*thileepan1983@yahoo.com,*
*gnanam55@hotmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

இந்திய (கீழைத்தேய) தத்துவச் சிந்தனை வளர்ச்சியில் சைவசித்தாந்தத் தத்துவம் சிறப்பிடம்பெற்று விளங்குகின்றது. சித்தாந்தத் தத்துவ வளர்ச்சி மற்றும் அதன் அடிப்படை உண்மைகளை விளக்குவதற்கு திருமுறைகளும் குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்குகின்றன. குறிப்பாக இறைவன் - இறைவனது வியாபகம், இயல்புகள், இலக்கணங்கள், ஆன்மா - ஆன்மாவின் உண்மைத்தன்மை, அதன் வகைகள், ஆன்மாவைப்பீடிக்கும் மலங்கள், முத்தி - முத்தியின் வகைகள், திருவருட்சக்தி தொடர்பான கருத்தியல் விளக்கங்கள் திருமுறைகளில் எடுத்துக்கூறப்படுவதனால் அவை சைவசித்தாந்தத் தத்துவ சிந்தனைகளுக்குரிய அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன. இத்திருமுறைகளில் மேற்கூறப்பட்ட கருத்தியல்கள் தொடர்பாகப் பலரது விளக்கங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவற்றுள் திருநாவுக்கரசரது நிலைப்பாடு ஆணித்தரமானதாக விளங்குகின்றது. குறிப்பாக அவரது தனிப்பட்ட வாழ்வு, சமூக நிலைப்பாடு மற்றும் அவைதிக சமயம் குறித்த எதிர்மறைக் கருத்தியல்கள் போன்றன சைவசித்தாந்தத் தத்துவம்சார் அதிலும் குறிப்பாக இறையிருப்பு தொடர்பான உண்மைத்தன்மையினை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றது. இதனை அவர் தமது பதிகங்களினூடாக வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனடிப்படையில் நாவுக்கரசரது பதிகங்களை ஆய்வு எல்லையாகக்கொண்டு சைவசித்தாந்தம் காட்டும் இறையிருப்புக் குறித்த நிறுவல்கள் அவரது பதிகங்களில் எங்ஙனம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது பற்றி

ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வானது வரலாற்று ரீதியிலான அணுகுமுறை, விபரண முறை மற்றும் பகுப்பாய்வு முறை போன்ற முறையியல்களை அடிப்படையாகக்கொண்ட ஆய்வாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** சைவசித்தாந்தம், இறையிருப்பு, நாவுக்கரசர், பதிகங்கள்

## அறிமுகம்

சித்தாந்தம் சைவத்திற்கே உரிய தனிச்சிறப்பு. இந்தியாவில் தோன்றிய தத்துவங்கள் அனைத்திலும் மேம்பட்டது சைவசித்தாந்தமே என்பது அறிஞர்கள் பலரினது கருத்தாகும். சைவசித்தாந்தத் தத்துவ ஆய்வுகளில் இறை (பதி), ஆன்மா (பசு), தளை (பாசம்) ஆகிய முப்பொருள் பற்றிய விளக்கங்கள் முதன்மையாக விளங்குகின்றன. இம்முப்பொருள் பற்றிய உண்மைகள் சைவசித்தாந்தத் தத்துவச் சிந்தனைகளை ஏற்றுக்கொள்பவர்களால் முடிந்த முடிவாக வைத்தெண்ணப்படுகின்றன. சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவாக வெளிக்கொணர்வதற்கு இறை அருளாளர்கள் (சமயகுரவர்கள்) திருவாய் மலர்ந்தருளிய தெய்வப்பாடல்களான திருமுறைகள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. குறிப்பாக இவ்வருளாளர்களின் வாழ்க்கையினின்றும் வாய்மொழிகளிலிருந்துமே சைவசித்தாந்தத் தத்துவ உண்மைகள் தெளிவுபெற்று வரையறை செய்யப்பெற்றுள்ளன என்பதனை அவர்களுடைய பதிகங்களினூடாக அறிந்துகொள்ளலாம்.

இறை அருளாளர்களில் நாவுக்கரசரது பதிகங்கள், என்ஞான்றும் நிலையான பேரின்பத்தை வழங்கும் இறையிருப்புக் குறித்த உண்மைத்தன்மைகளை அருளியல் நோக்கத்துடன் மற்றவர்களும் அறிந்து, அதனூடாக அனுபவிக்கும் பொருட்டு கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. இதனையே "திருநின்ற செம்மையே செம்மையாகக்கொண்ட, திருநாவுக்கரையன்றன் அடியாருக்கும் அடியேன்" என நம்பியாரூரர் அவரின் சிறப்புக்களை எடுத்துரைத்தமை தக்கசான்றாகும்.

நாவுக்கரசரது தனிப்பட்ட வாழ்வு அவர் ஒரு சமயகுரவராக மட்டுமன்றி சமூக வாழ்வினூடாக ஆன்மீக ரீதியிலான சிந்தனைகளைக் கட்டியெழுப்புவதற்கான பணிகளை மேற்கொண்டதோடு சமய வரலாற்றில் சைவ பக்தி முன்னெடுப்புக்களை உரியமுறையில் நகர்த்திச்சென்றவர் என்றவகையிலும் வரலாற்று முக்கியத்துவமுடையவராக விளங்குகிறார். இவருடைய பதிகங்களில் சைவசித்தாந்தம் காட்டும் இறையிருப்பு மற்றும் ஆன்மா, உலகம், கன்மம், மறுபிறப்பு, முத்தி, அதனையடைவதற்கான வழிவகைகள், திருவருட்சத்தி போன்ற பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இறையிருப்புக் குறித்து நிறுவுவதற்கான முறையியல்களை எங்ஙனம் தமது பதிகங்களில் பயன்படுத்தினார் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக விளங்குகின்றது.

## சைவசித்தாந்தமும் இறையிருப்பும்

இந்திய சமய, தத்துவங்களுள் இறைவனை ஏற்று நிற்பவை வைதீக சமயங்கள் அல்லது தரிசனங்கள் எனப்பொதுவில் ஏற்கப்படுதலைக் காணுகின்றோம். இறைவனை ஏற்று நிற்கின்ற வகையில் சைவசித்தாந்தமும் வைதீகப் பகுப்பில் உள்ளடங்குகின்றன. சைவம், சித்தாந்தம் எனும் இரு சொற்களின் சேர்க்கையே சைவசித்தாந்தமாகும். 'சைவம்' சிவத்தோடு தொடர்புடையது. அதாவது சிவனை முழுமுதல் பரம்பொருளாகக் கொண்ட சமயம் சைவசமயமாகும். 'சித்தாந்தம்' எனும் சொல்லானது சித்தம், அந்தம் எனும் பகுப்பிற்குட்பட்டன. சித்தம் என்பது முடிவானது என்பதனையும், அந்தம் என்பது முடிவு என்பதனையும் சுட்டி நிற்கின்றது. இதன்படி சித்தாந்தம் என்பது முடிந்தமுடிவாகும். சைவசித்தாந்தமென்பது பரந்த நோக்கில் சைவசமயத்தின் முடிந்த முடிவினை எடுத்தியம்புவது எனலாம். (சாம்பசிவனார், 1997:14).

சைவசித்தாந்தமானது இறைவன் (பதி), ஆன்மா (பசு), தளை (பாசம்) ஆகிய முப்பொருட்களின் உண்மைத் தன்மையினை பிரத்தியட்சம் (காட்சியளவை), அனுமானம் (கருதலளவை), ஆப்தவாக்கியம் (சொல்லளவை) ஆகிய பிரமாணங்களின் வழி நிறுவுகின்றன. இம்முப்பொருட்கள் பற்றிய நிறுவல்கள் சைவசித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளாகும். இவற்றை முடிந்த முடிவாகத் தர்க்க ரீதியில் எடுத்து விளக்குவதில் சைவசித்தாந்தம் சிறப்பிடம்பெற்று விளங்குகிறது எனலாம் (நா.ஞானகுமாரன், 2012:13).

சித்தாந்தம் காட்டும் முப்பொருட்களில் பதியுண்மை அதாவது இறையிருப்பு முதன்மைக்குரியது. பதி என்பது தலைவன் எனப்பொருள்படும். சித்தாந்திகள் பதியாகச் சிவத்தை முதன்மைப்படுத்துகின்றார்கள். அனைத்துலகிற்கும் அனைத்துயிர்களுக்கும் தலைவரானதால் சிவன் பதியானார். எல்லா நலன்களும் அமைந்த அவருக்கு இணையாக எதனையும் ஒப்பிடமுடியாது. இதனாலேயேதான் திருமூலர் போன்ற அருளாளர்கள் "சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்றும் "அவனை ஒழிய அமரரும் இல்லை" எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும்.

சிவம் எனப்படும் பரம்பொருள் பற்றிச் சித்தாந்திகள் அறிவியல் ரீதியாகவும் அதிகார நூல்களின் வழி பிரமாணங்கள் வாயிலாகவும் நிறுவியுள்ளதை பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். அதாவது, பரந்து காணப்படும் உலகம் காண்பதற்கரிய கடவுள் ஒருவனால் தோற்றுவிக்கப்பெற்ற உள்பொருளே என்பதும் "யாது யாண்டு ஒடுங்கும் அஃது அதனில் உற்பத்தியாம்" அதாவது, காட்சியளவையால் கண்டுணரும் உலகினை ஒடுக்கிய இறைவனே மீளத் தோற்றுவிப்பவனாவான் எனச் சைவசித்தாந்தம் இறையிருப்பிற்கு விளக்கமளிக்கிறது (க.வெள்ளைவாரணனார், 2002:710).

சித்தாந்தம் முதன்மைப்படுத்தும் இறையிருப்பினை மேலும் தெளிவுபடுத்துகையில், "சிவனருளே கண்ணாகக் கொண்டு தன்னைக் காணவல்ல தவச்செல்வர்களுக்கு அவர்களது உள்ளத்துள்ளே பேரொளிப் பிழம்பாகத் தோன்றியருள் புரிதல் அருளாளனாகிய இறைவனது

இயல்பாகும்". எனவே "அப்பெருமானைப் புறத்தே கண்டு மகிழ வேண்டுமென விரும்புவோர்க்கு அவர்கள் விரும்பிய வண்ணமே எதிர்தோன்றிக் காட்சியளிக்கவல்ல எளிமைத் தன்மைவாய்ந்த அருளாளன் அவன். அவனைக் கைதொழுது போற்றும் மெய்யடியார்களுக்கு அவனது திருவுருவத்தைக் காண இயலும்" என்பது சித்தாந்திகளின் அசையாத நம்பிக்கையாகும். இறையிருப்பினை மெய்ப்பிக்கும் சித்தாந்திகள் சற்காரியவாதத்தினை முதன்மைப்படுத்துகின்றனர். அதாவது சற்காரியவாதம் என்பது காரணமும் உண்மை காரியமும் உண்மை என்பதாகும். இதனையே சிவப்பிரகாசம்,

"உலகமெலா மொருவனோ டொருத்தி யொன்றென், றுளதாகி நின்றளவி..........." (மு.திருவிளங்கம், 1933:29) என வலியுறுத்துகின்றது. அதாவது, மூல காரணமின்றி எவ்வித உற்பத்தியுமில்லை என்பதே மேற்குறித்த சுலோகம் வெளிப்படுத்தும் உண்மையாகும். இதனை விளக்குவதற்குப் பானையை உதாரணமாகக் கொள்வர் சித்தாந்திகள். பானையினை வனைவதற்கு முதற்காரணமாகிய மண்ணும் துணைக்காரணமாகிய கருவியும் இன்றியமையாதன. இருந்தும் இவ்விரு காரணங்களாலும் குறித்த பானையை முழுமை பெறச் செய்ய இயலாது. எனவேதான் பானையை முழுமைபெறச் செய்வதற்கு நிமித்தகாரணமாகிய ஒருவன் இன்றியமையாதவனாக விளங்குகின்றான். அதுபோலவே உலகினது உற்பத்தி மற்றும் தொழிற்பாட்டிற்கு ஒரு சக்தியானது அவசியமானதொன்றாகும். இதனையே,

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி........." (அற்புதத்திரு.5) என அற்புதத்திருவந்தாதி வலியுறுத்துவதை ஆதாரமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு காணுதற்கரிதான இறையிருப்பினை பல்வேறு எடுத்துக்காட்டுக்களின் மூலம் தர்க்க முறையில் நிறுவியுள்ளமை சைவசித்தாந்தம் காட்டும் இறையிருப்பிற்குத் தக்கசான்றுகளாக விளங்குகின்றன எனலாம்.

## திருமுறைகளில் சைவசித்தாந்தம்

சைவசித்தாந்தத் தத்துவ உண்மைகளை விளக்கும் நூல்களில் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்நூல்களின் தத்துவச் சிறப்புக்கள் திருமுறைகளில் உள்ளடங்கியிருப்பதனை நாயன்மார்களின் பதிகங்களினூடாக அறிந்துகொள்ளலாம். எவ்வாறாயினும் சைவத் திருமுறைகள் மற்றும் மெய்கண்ட சாத்திர நூல்கள், அவற்றுக்கு மாறுபடாமல் அவற்றைத் தழுவிச்செல்லும் ஏனைய பிற நூல்களுமே சைவசித்தாந்தத்தின் உண்மைகளை எடுத்துரைக்கின்றன. இதனையே,

**"வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்**

ஓது தமிழ் அதனுள்ளுறு நெய் - போதமிகு........" (தனிச்செய்யுள்) எனும் பாடல் வெளிப்படுத்தி நிற்கின்றது. இறைவனது அருள்பெற்ற செம்புலச் செல்வராகிய சமயகுரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப் பாடல்களே திருமுறைகளாகும். இதனையே, "பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்தேன்" என்ற நாவுக்கரசரின் வாய்மொழிகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். உண்மையில் சிவப் பரம்பொருளைப் போற்றிப் பாடிய திருமுறைகளில் முப்பொருள்

உண்மை அவற்றின் இயல்புகள், இலக்கணங்கள் மற்றும் மன்னுயிர்கள் இறைவனை வணங்கிப் பிறவிப் பிணியினின்றும் விடுபட்டு உய்தி பெறுவதற்குரிய சாதனங்களும் இறைவன் திருவருளைப்பெற்றோர் அடையும் பேரின்ப நிலையாகிய வீடுபேறு போன்ற சைவசித்தாந்தத் தத்துவங்களை வெளிப்படுத்தும் உண்மைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவனருளே கண்ணாகக் கொண்டு தன்னைச் சிந்தித்துக் காணவல்ல அருளாளர்களுக்குக் காட்சிக்கு எளியவனாகி உள்ளத்துள்ளே பேரொளிப் பிழம்பாகத் தோன்றி அருள்புரிதல் அருளாளனாகிய இறைவனது இயல்பாகும். எனவேதான், 'யான் பெற்ற இன்பம் பெறுக வையகமே' எனும் அருள் நோக்கத்துடன் தாம் அனுபவத்தாற் கண்டுணர்ந்த உண்மைகளை மக்களுக்கு அறிவுறுத்தி அதன்மூலம் சமயம் மற்றும் இறை நம்பிக்கையை ஏற்படுத்தி நல்லொழுக்க நெறி மூலம் உலகம் உய்ய வழிவகை செய்தவர்களில் சமய அருளாளர்கள் என்றால் மிகையாகாது.

## திருநாவுக்கரசரின் பதிகங்களினூடு இறையிருப்பை நிறுவுதல்

மக்கள் சீரான முறையில் வாழ்வதற்கும் வாழ்வின் நிறைபயனாகிய இறையின்பத்தை எய்துவதற்குரிய சமயநெறியில் இறைபணியே வாழ்வென்ற இலட்சிய நோக்கோடு வாழ்ந்து காட்டிய சமயகுரவர்களில் திருநாவுக்கரசரும் குறிப்பிடத்தக்கவராவார். "மானிட இனத்தை உய்விக்க வந்த சைவப் புண்ணியக் கண்கள்" எனச் சேக்கிழார் பெருமானால் போற்றப்பட்டவர்களில் நாவுக்கரசரும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவருடைய பதிகங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பதிகங்களிலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 3066 ஆகும். இவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களை அடிப்படையாகக்கொண்டே இறையிருப்புக் குறித்த நிறுவல்கள் ஆராயப்படுகின்றன. உண்மையில் நாவுக்கரசரின் பதிகங்கள் அவைதிக சமயத்தின் பாற்சென்ற மக்களையும் மன்னர்களையும் சைவத்தின் பாற்படுத்தி மீட்டுருவாக்கம் செய்வதற்கான பக்தி இயக்கத்தின் குரலாக மிளிர்கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நாவுக்கரசருடைய வாழ்வும் அவருடைய சமயப் பணிகளும் தனித்துவமானவை. இளம் வயதிலிருந்தே அவரது வாழ்வு சோதனைக் களமாகவே விளங்கியிருந்தன. அதாவது பெற்றோரின் இழப்பு மற்றும் தமக்கையாரான திலகவதியாருக்கு ஏற்பட்ட துயரச் சம்பவங்கள் யாவும் அவரது வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்படுவதற்கு ஊன்றுகோலாய் விளங்கியிருந்தன. இத்தகைய சூழ்நிலையும் அதனால் விளைந்த மன உளைச்சலுமே அடிகளாரைச் சமண சமயத்திற்கு ஈர்த்தன என்றுகொள்வது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. எவ்வாறிருந்தும் தம்பி புறச்சமயம் சார்ந்ததை எண்ணி வருந்தி அதிகைப்பெருமான் திருமுன்நின்று 'என்னை ஆண்டருளினீராகில் அடியேன் பின்வந்தவனை புறச்சமயப் படுகுழியின்றும் எடுத்தாள வேண்டும்' என விண்ணப்பம் செய்தார். தமக்கையாரின் இவ்வேண்டுதலினால் நாவுக்கரசருக்கு சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டது. நோயினால் 'ஆட்கொள்ளப்பெற்றவருக்கு' எவ்வளவு முயன்றும் குணமடையாதவராய் தமக்கையாரை நாடி திருநீறுபெற்று "கூற்றாயினவாறு விலக்ககிலீர்..........." (நாவுக்கரசர் தேவாரம், 4:1:1) எனத் தொடங்கும் முதற் பதிகத்தைப் பாடியருளினார்.

சூலைநோய் அகன்றதும் இறைவனுக்கே முற்றாக அடிமையானார். தொடர்ந்து சிவ சின்னம் பூண்டு சிவப்பணியிலும் வழிபாட்டிலும் தம்மை ஈடுபடுத்தி உள்ளம் கசிந்துருகி இன்புற்றார். இத்தகைய அனுபவங்கள் அவரின் பதிகங்களினூடாக வெளிப்படுத்தப்படும் சைவசித்தாந்தம் காட்டும் இறையிருப்புக் குறித்த மெய்ப்பித்தலுக்குத் தக்கசான்றுகளாக விளங்குகின்றன. அத்தோடு நாவுக்கரசருக்கு சமண சமயம் குறித்த எதிர்நிலைப்பாடும் இறையிருப்புக் குறித்த நிறுவல்களுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தது எனலாம்.

சைவத்தில் இணைந்து இறைவன் மீது அசையாத நம்பிக்கையோடு வாழ்ந்த நாவுக்கரசருக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகளோ எண்ணிலடங்கா. இருந்தும் அக்கொடுமைகளினூடாக ஏற்பட்ட வேதனைகளும் சோதனைகளும் அவரை ஒரு ஆளுமைமிக்கவராக மாற்றியமைத்ததோடு இறைவன் மீது நெருங்கிய பற்றுடையவராக விளங்குவதற்கும் வழிகோலியது. இதன் பின்னணியிலேயேதான் நாவுக்கரசர், இவ்வுடலிலிருந்து நான் பிரியும்போது, "உன் திருவடிக்கீழ் எனக்கோர் இடம் கொடுத்துவிடு" என்றும் "புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்" என இரந்து கேட்கின்ற சந்தர்ப்பங்களும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இறுதியில் சைவம் அவருடைய ஆழ்மனதில் வேரூன்றியதால் சிவநெறியில் சைவனாகவே வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவராவார். இதனையே அவர், "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்............" (தேவாரம், 5:90:7) எனும் பதிகத்தினூடாக வெளிப்படுத்துகின்றார்.

சமய வரலாற்றில் சரியைத் தொண்டிற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டிய நாவுக்கரசர் தமது வாழ்வாலும் வாக்காலும் ஒருமித்து வாழ்ந்து 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்ற தாரகமந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு சமயத்தொண்டுகளை ஆற்றியிருந்தார். "உழவாரத்தின் படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்" எனக் காஞ்சிபுராணம் திருநாவுக்கரசரின் பணியைப் போற்றித் துதிக்கின்றமை சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும் இவருடைய தொண்டுகளை, "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா............" (தேவாரம், 6:31:3) என்ற பாடல்வரிகள் தெளிவாக வலியுறுத்துகின்றது.

இறைவனைப் பல இடங்களிலும் தமது பதிகங்களினூடாக விழித்துப் பாடிய நாவுக்கரசர், இறைவனைக் காட்சிக்குரியவனாகவும் எங்கும் வியாபித்திருப்பவனாகவும் அறிதற்கும் உணர்தற்கும் உகந்தவனாய் விளங்குகிறான் என எடுத்தாளுகின்றார். இதனையே, 'பார்த்த விடமெங்கனும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணானந்தமே' என்ற தாயுமான சுவாமிகளின் அனுபவ நிலையும் இறையருள் வயப்பட்ட சமயகுரவர்களின் (குறிப்பாக நாவுக்கரசர்) நிலைப்பாடும் ஒருமித்ததாய் விளங்குவதைக் கண்டுகொள்ளலாம். இவ்வண்ணம் பிரபஞ்சம் அனைத்தும் பரம்பொருளாகிய சிவனில் அடக்கமாகவும் அனைத்துமாகி அவன் வீற்றிருக்கிறான் எனவும் புலப்படுத்தப்படுகின்றது. இதனையே நாவுக்கரசர், "எல்லாம் சிவனென நின்றாய் போற்றி............" (தேவாரம், 6:5:1), "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே..........." (தேவாரம், 6:38:1), "ஒருவனாய் உலகேத்த நின்ற.........." (தேவாரம், 6:34:1), "கருவினைக் கடல் வாய்விட முண்டவெம்........." (தேவாரம், 4:4:8) எனும் பதிகங்களினூடாக வெளிப்படுத்திக்காட்டுகின்றமை தக்கசான்றுகளாகும்.

நாவுக்கரசர், சைவசித்தாந்தம் உண்மைப்படுத்தும் இறைவனுடைய இலக்கணங்கள் பற்றிப் பல பதிகங்களினூடாக வெளிப்படுத்திக்காட்டியுள்ளமையும் இறையிருப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். (நாயன்மார்கள் பொதுவாக இறைவனது இலக்கணங்கள் பற்றி தமது பதிகங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்களே ஒழிய சித்தாந்தம் காட்டும் சொரூபம், தடத்தம் பற்றி வேறுபடுத்திப் பாடியிருக்கவில்லை. ஆனால் சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வாக அமைவதனால் பதிகங்கள் பிரித்து நோக்கி அறியப்படுகின்றன). குறிப்பாக சித்தாந்திகள், இறைவன் குணம், குறிகளோடு திருமேனிகள் பெற்று ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் தடத்த இலக்கணம் பற்றியும் குணம், குறிகளற்ற யாவற்றையும் கடந்த நிலையாகிய சொரூப இலக்கணம் பற்றியும் அழுத்தமாக விதந்துரைக்கின்றனர்.

இறைவனின் சொரூப இலக்கணம் பற்றிக், "குணமிலான் குணம் குறியிலான், குறைவிலான் கொடிதாம்........" எனத் தாயுமானவ சுவாமிகளும் (தாயுமானவர் பாடல், 24:30) "நிலவும் அருவுருவமின்றிக் குணங்குறிகளின்றி........" என உமாபதிசிவாச்சாரியாரும் (மு.திருவிளங்கம், 1933:23) வலியுறுத்துவதிலிருந்து அந்நிலை பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளலாம். ஆனால் நாவுக்கரசரின் பாடல்களில் சிவனின் சொரூப நிலை இன்னதென எவராலும் அறுதியிட்டுச் கூறமுடியாதென்பது நுணுகிப்பார்க்குமிடத்துத் தெளிவாகின்றது. இதனையே அவர், "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர்........." (தேவாரம், 4:8:2), "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" (தேவாரம், 6:97:10) எனும் பாடலினூடாகக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

பொதுவாகச் சொரூப நிலையில் இறைவன் தனக்கென்று ஓர் உருவும் பெயரும் இல்லாதவனாயினும் தடத்த நிலையில் உயிர்களின் பொருட்டுப் பல உருவும் தொழிலும் பெயரும் உடையவனாகின்றான் என்பதை அறியமுடிகின்றது. இதனையே திருவாசகம், "ஒரு நாமம் ஓர் உருவம்......." எனச் சுட்டிநிற்கின்றது. அதாவது நாம் வணங்கும் இறைவனை விழித்து நாயன்மார்கள் காட்சிக்குரியவனாய், திருவுரு படைத்தவனாய், அறிதற்கும் உணர்தற்கும் உகந்தவனாய் எடுத்தாண்டிருக்கின்றார்கள். (இந்திய மரபில் இறைவனுக்கு உருவம் கொடுத்து வழிபடுதல் என்பது முதன்மையானதொன்றாகும். இதனை ஆகமங்கள் முதற்கொண்டு பிற்பட்டு வந்த பல்வேறுபட்ட தத்துவங்களும் வெளிப்படுத்தியிருப்பதனை அறிந்துகொள்ளலாம்). இவ்வகையில் இறைவனைக் கண்ணாரக் கண்டு பாடி மகிழ்ந்தவர்களில் நாவுக்கரசரும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இதனையே அவர், "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்........" (தேவாரம், 4:81:4), "நெற்றித் தனிக்கண்ணுடையான் கண்டாய்........" (தேவாரம், 6:39:3), எனும் பாடலடியினூடாக வலியுறுத்துகின்றார்.

மேலும் தடத்த நிலையிலுள்ள இறைவனே பஞ்சகிருத்தியக் கடவுளாக விளங்குவதுடன் உலகப்பொருட்களுடன் தன் சக்தியினால் கலந்து நின்று இயக்குவிப்பான் எனக் கூறுகின்றார். இந்நிலையில் உலகம் முழுவதும் பக்தியுடன் சம்பந்தப்பட்டே தொழிற்படும். இந்நிலையை,

"நீரானைக் காற்றானைத் தீயானானை
நீள்விசும்பாய் ஆழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த..........." (தேவாரம், 6:69:1)

எனப்பாடியுள்ளமையும் தக்கசான்றுகளாகும்.

மேற்கூறப்பட்டவாறு இறைவனைப் பல நிலைகளிலும் கண்டு பாடிய நாவுக்கரசர், இறைவன் எழுந்தருளி வீற்றிருக்கும் பல தலங்கள் தோறும் சென்று இசையோடு திருப்பதிகங்கள் பாடி மகிழ்ந்தமையும் இறையிருப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். சான்றாக, திருவாரூர் மாவட்டத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு அக்னிபுரீஸ்வரர் (திருஅன்னியூர்) மீது பல பாடல்களைப் பாடியருளினார். "ஆறலைத்த சடையன்னி யூரனே" (தேவாரம், 5:8:1), "அண்டத் தப்புறத்தான் அன்னி யூரனே" (தேவாரம், 5:8:2) , "அரவம் ஆட்டுபவர் போலன்னி யூரனே" (தேவாரம், 5:8:3), "ஆதியாகி நின்றார் அன்னி யூரனே" (தேவாரம், 5:8:4), "அன்பராகி நின்றார் அன்னியூரரே" (தேவாரம், 5:8:5) போன்ற பாடலடிகளைக் குறிப்பிடலாம்.

இறுதியில் உள்ளமுவந்து இறைவனின் கையிலைக்காட்சியைக் காணப் பேரவா கொண்டார். காடு மலைகளைக் கடந்து, ஊன்கெட்டு, உறக்கம் கெட்டு போகும் வேளையில் தான் அனுபவித்த துன்பங்களை, "நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி, முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்தும் தொண்டன்" என அவர் வாயிலாகக் கூறியுள்ளமை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாவுக்கரசரின் மனநிலையை அறியும் நோக்கோடு முனிவர் வடிவில் வந்த இறைவன் "இனி உம்மால் கையிலைக் காட்சியைக் காண்பது அரிது, இங்கிருந்து மீளுவதே சிறந்தது" எனப் பணித்தார். ஆனால் அடியனோ, "ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" (க.வெள்ளைவாரணனார், 1972:242) என உறுதி பூண்டார். இறுதியில் இறைவன் தோன்றியருளி சக்தி சிவமான கையிலைக்காட்சியைக் காணும்படி அருளிச்செய்தார். அந்த அற்புதக் காட்சியைக் கண்ட நாவுக்கரசர், "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனைக் கண்டேன்" (தேவாரம், 4:3:1) எனப் பாடி அகமகிழ்ந்தார்.
உண்மையில் நாவுக்கரசரின் மேற்குறித்த பதிகங்கள், அவர் இறைவன் மீது கொண்ட அசையாத நம்பிக்கையினையும் இறுக்கமான நிலைப்பாட்டினையும் எடுத்துக்காட்டுகின்றது. பரம்பொருளாகிய இறைவனை அகத்தூய்மையோடும் புறத்தூய்மையோடும் தொழுபவர்களுக்கு இவ்வுலகத்தில் எத்தகைய துன்பமும் விளையாது. அவர்கள் வினைவயத்தால் அடையக்கூடிய துன்பம் எதுவாயினும் அதிலிருந்து உய்யலாம் என்பது நாவுக்கரசரின் உள்ளத்துணிவாகும்.

"ஐயன் ஆரூர் அடிதொழுவார்க்கெலாம், உய்யலாம் அல்லல் ஒன்றிலை." (தேவாரம், 4:88:1), "துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்." (தேவாரம், 5:8:5), என வலியுறுத்துகின்றார். இதனையே கீதையில் கிருஸ்ண பரமாத்மா, "யார் என்னை எவ்வுருவிலே வழிபடுகிறார்களோ அவர்கட்கு யான் அவ்வடிவிலே காட்சி தருவேன்" எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும்.

## நிறைவுரை

நாவுக்கரசருடைய பதிகங்களிலே சைவசித்தாந்தம் காட்டும் பதியான இறைவனது இருப்புக் குறித்த நிறுவல்கள் பல இடங்களில் வெளிப்பட்டு நிற்பதைக் இவ்வாய்வினூடாகக்

கண்டுகொள்ளலாம். குறிப்பாக நாயன்மார்களது பதிகங்கள் சைவசித்தாந்தத் தத்துவ உண்மைகள் வலுப்பெறுவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. எனவே எல்லாம் வல்ல இறைவனை தமது பாடல்களால் உளமுருகிப் பாடி, அப்பெருமானின் பாதங்களை அடைந்து இன்புறுவதற்குரிய எளிய வழிமுறைகளை உலகத்தாருக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் உய்வடையும் பொருட்டு எடுத்துரைத்த பெருந்தகைகள் நாயன்மார்கள் ஆவார். இதன்படி இறையிருப்பின் உண்மைத்தன்மையினை தெளிவா உணர்வதற்கு - அறிவதற்கு நாவுக்கரசரது பதிகங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


அருணாசலம், ப. (1973) பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், சென்னை: தமிழ்ப் புத்தாகாலயம்.

ஆறுமுகநாவலர், (1986) திருநாவுக்கரசு நாயனார் புராணம், சிதம்பரம்: ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை.

கிருஸ்ணராஜா, சோ. (1995) சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், கொழும்பு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சாம்பசிவனார், ச. (1997) திருவாசகத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், மதுரை: வளவன் வெளியீடு.

சுப்புரெட்டியார், ந. (2001) சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

(2010) சைவ சமய விளக்கு, சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

சுப்பிரமணியம், வே.ச. (2013) பன்னிரு திருமுறை, சென்னை: மாணிக்கவாசகர் பதிப்பகம்.

ஞானகுமாரன், நா. (2012) சைவசித்தாந்தத் தெளிவு, யாழ்ப்பாணம்: தூண்டி கேணியடி, திருநெல்வேலி.

(2004) அருளாளர்களின் சமய அனுபவங்கள், அல்வாய்: அமரர் ஆறுமுகம் கதிரவேல் ஞாபகார்த்த வெளியீடு.

திருவிளங்கம், மு. (1933) சிவப்பிரகாசம், சுண்ணாகம்: திருமகள் பதிப்பகம்.

வசந்தா வைத்தியநாதன், (1994) பன்னிரு திருமுறை மாமலர், கொழும்பு: விவேகானந்த சபை வெளியீடு.

வெள்ளைவாரணனார், க. (2002) சைவசித்தாந்த சாத்திர வரலாறு, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

(1972) பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலை: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அனைத்துலகச் சைவ மாநாடு ஆய்வடங்கல், (2017) இந்துநாகரிகத்துறை, கலைப்பீடம், இலங்கை: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.